# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 11** **நேரம் : 1. 00 மணித்தியாலம்**

**சுட்டெண்:** ..........................................

**புள்ளிகள் :** ____ / 100

---

### பகுதி I

**பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) “காரென்று பேர்படைத்தாய் ககனத்துறும் போது” - **கார்** என்பதன் ஒத்த கருத்து
i) மழை ii) மேகம் iii) நீர் iv) ஆகாயம்

2) “வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது” **தழல்** என்பதன் ஒத்த கருத்து
i) வெப்பம் ii) நீர் iii) விறகு iv) நெருப்பு

3) “கன்னலும் தேனும் கனியுமின் பாலும்” இதில் **கன்னல்** என்பது
i) தேன் ii) கரும்பு iii) நெல் iv) பால்

4) அதிபரின் புதிய கருத்துக்களைச் சபையினர் ஆமோதித்தனர். **ஆமோதித்தனர்** என்பதன் எதிர்ப்பதம்
i) ஏற்றுக்கொள்ளல் ii) ஆட்சேபித்தல் iii) புரிந்துகொள்ளல் iv) உடன்படுதல்

5) விருந்தினரை உவத்தலும் வரவேற்றலும் தமிழர்தம் பண்பாடு. **உவத்தல்** என்பதன் எதிர்ப்பதம்
i) மகிழ்ச்சி ii) துக்கம் iii) மறுத்தல் iv) காய்தல்

**பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) ஆயுள் முழுவதும் பிரமச்சரிய விரதம் காத்து வாழ்வோன்
i) நைட்டிகன் ii) துறவி iii) நாத்திகன் iv) சான்றோன்

7) அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு பொருள்கள்
i) சால்பு ii) புருடார்த்தம் iii) அறம் iv) மார்க்கம்

8) சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்
i) ஒற்றி ii) ஆதனம் iii) கையூட்டு iv) அடைவு

9) உலக நடையறிந்து ஒழுகுதல்
i) ஓம்படை ii) சான்றாண்மை iii) பேராண்மை iv) ஒப்புரவு

10) Climate (கிளைமற்) எனும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச்சொல்
i) படியாக்கம் ii) இசைவாக்கம் iii) காலநிலை iv) வானிலை



kalvi.lk

11) அரி, மிருகேந்திரன், கேசரி என்ற ஒரு பொருள் குறிக்கும் பல சொல்
i) சிங்கம் ii) வேதம் iii) வில் iv) கரி

12) வைக்கோல் தொகுதி கற்றை என்பது போல புகையிலைத் தொகுதி
i) குவியல் ii) சிப்பம் iii) அடுக்கு iv) போர்

13) ஆண்குதிரை குண்டு: ஆண்புலி
i) கடுவன் ii) அலவன் iii) களிறு iv) போத்து

14) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் எனும் அருஞ்சொற்றொடர் குறிப்பது
i) தளர்வு ii) தேய்வு iii) மறைவு iv) வளர்ச்சி

15) மகிழ்ச்சியை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் தொடர்
i) தேடியோடி ii) ஓய்வு ஒழிச்சலின்றி iii) ஆடிப்பாடி iv) கையும் களவும்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) வலிந்து திணித்தல் எனும் கருத்தைத் தரும் மரபுத் தொடர்
i) கழுத்திற் கட்டுதல் ii) கைமிகுதல் iii) கழுத்தைக்கட்டுதல் iv) கைவிடல்

17) தீய பழக்கங்களுக்கு அடிமையாகிய விதுரன் குடிமுழுகிப் போனான். குடிமுழுகிப்போதல் எனும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
i) முற்றாய் அழிதல் ii) கேடு செய்தல்
iii) இறத்தல் iv) கெட்டழிந்து போதல்

18) நற்புகழ் ஒருபோதும் மங்காது என்ற கருத்தைத் தரும் பழமொழி
i) குடிப்பதுகூழ் கொப்பளிப்பது பன்னீர்
ii) குப்பையிலே கிடந்தாலும் குன்றிமணி மங்காது
iii) நிறைகுடம் தளம்பாது
iv) பதறாத காரியம் சிதறாது

19) எதிர் பொருள் குறிக்கும் இரு சொற்கள் இணைந்து வரும் இணைமொழியாக அமைவது.
i) ஈவிரக்கம் ii) சீரும் சிறப்பும் iii) குற்றம் குறை iv) ஆக்கமும் கேடும்

20) பயனற்றது என்ற கருத்தைத் தராத உவமைத் தொடர்.
i) காட்டில் எறித்த நிலா போல ii) காட்டாற்று வெள்ளம் போல
iii) புறக்குடத்து வார்த்த நீர் போல iv) செவிடன் காதில் ஊதிய சங்கு போல

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21) பெயராகவும் வினையாகவும் வழங்கக்கூடிய சொல்
i) கறை ii) விறலி iii) வரை iv) மரம்

22) பகாப்பதமாக அமையும் சொல்
i) அரசன் ii) கூனி iii) கூடும் iv) நிலா

23) கூட்டுப் பெயராக அமையாதது
i) புத்திசாலி ii) வாய்க்கால் iii) வானொலி iv) பறிமுதல்



kalvi.lk

24) தூரிகையால் வரைந்தான் என்பதில் ஆல் உருபு உணர்த்தும் பொருள்
i) கருத்தா ii) கருவி iii) உடனிகழ்ச்சி iv) ஆக்கல்

25) செயப்படுபொருள் குன்றிய வினையாக அமைவது
i) நடந்தான் ii) உழுதான் iii) நடித்தான் iv) உண்டான்

26) குறிப்பு வினை எச்சமாக அமைவது
i) ஓடிய ii) ஓடும் iii) கரிய iv) படித்த

27) பிறவினைச் சொல்லாக அமைந்த சொல்
i) பயின்றான் ii) ஆடினான் iii) உருட்டினான் iv) திரும்பினான்

28) விதித்தல் பொருளில் வந்த வியங்கோள் வினைச்சொல்
i) ஓங்குக ii) தொலைக iii) பொழிக iv) எழுதுக

29) கவிஞரும் போற்றிய மனிதர் இங்கு உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்
i) உயர்வு சிறப்பு ii) இழிவு சிறப்பு iii) ஐயம் iv) எச்சம்

30) வழாநிலைச் சொல்லாக அமைவது
i) ஒட்டறை ii) தொப்புள் iii) சீயாக்காய் iv) குடுமி

**பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.**

31) நவீன உலகில் தொடர்பாடல் சாதனங்களில் முக்கிய இடம் வகிப்பவைகளில் பத்திரிகையும் ஒன்று. பத்திரிகைகள் பல்துறை சார்ந்த அறிவை மக்களுக்கு எடுத்துக்கூறுகின்றன.
i) தொடர்பாடல் சாதனங்கள் நவீன உலகில் உண்டு
ii) தொடர்பாடல் சாதனங்களால் அறிவைப் பெறலாம்
iii) பத்திரிகை தொடர்பாடல் சாதனங்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றது
iv) தொடர்பாடல் சாதனங்களால் அறிவு வளரும்

32) ஒழுக்கநெறி தவறி வாழ முற்பட்ட சங்கமருவிய கால மக்களை நெறிப்படுத்த வேண்டிய தேவை புலவனுக்கு இருந்தது. மக்களை நெறிப்படுத்த அறமுரைக்க முற்பட்ட புலவர்களால் அறநூல்கள் எழுதப்பட்டன.
i) சங்கமருவிய கால மக்களை நெறிப்படுத்தினர்
ii) புலவர்கள் அறம் உரைத்தனர்
iii) புலவர்கள் அறநூல்களை எழுதினர்
iv) மக்களை நெறிப்படுத்தும் பொருட்டு அறநூல்களை எழுதினர்

**பின்வரும் வினாக்களில் உள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

33) ஒவ்வொரு
i) பழமும் சுவையுடையது ii) பழங்களும் சுவையுடையவை
iii) பழமும் சுவையுடையது iv) பழங்களும் சுவையுடையவை

34) மழை வருமென அறிந்திருந்தால்
i) குடை கொண்டு வந்தேன் ii) குடை கொண்டு வருவேன்
iii) குடை கொண்டு வந்திருப்பேன் iv) குடை கொண்டு வருகிறேன்.



kalvi.lk

35) நீயும், நானும், அவனும் சில பண்புகளில்
i) ஒத்திருக்கின்றனர் ii) ஒத்திருக்கின்றீர்கள் iii) ஒத்திருக்கின்றோம் iv) ஒத்திருப்போம்

36) பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.
i) இந்நாட்டின் முதுகெலும்பாக விழங்குபவர்கள் உழவர்களாவர்.
ii) எல்லா வீடுகளும் அழகானது.
iii) எந்த விடையத்தையும் வெளிப்படையாகப் பேசவேண்டும்.
iv) இன்றைய தலைமுறையினர் நவநாகரிகத்தை விரும்புகின்றனர்.

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37) போர்க்களத்தில் பலவகைப்பட்ட படைவகுப்புக்களின் இறுதியில் நிற்கும் படை .......................... என அழைக்கப்படும்.
i) கூழைப்படை ii) காலாற்படை iii) குதிரைப்படை iv) தூசிப்படை

38) இருநாட்டு இராணுவப்படைகளுக்கிடையில் போர் ............................. செய்யப்பட்டது.
i) பிரசுரம் ii) பிரசாரம் iii) பிரகடனம் iv) பிரகாரம்

39) ........................................... மிகவும் கருணையுடன் ஆதரிக்க வேண்டும்.
i) சித்தசுவாதீனம் உள்ளவர்களை ii) சித்தசுவாதீனம் அற்றவர்களை
iii) சித்தசுவாதீனக் காரர்களை iv) சித்தம் தெளிந்தவர்களை

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்காக அமைத்தால் கட்டுக் கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ) மனித விழுமியங்கள் சேர்க்கப்படாத அறிவு பயனற்றது.
ஆ) அது அறிவியல் சார்ந்தது.
இ) அதாவது அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனித விழுமியங்கள் சார்ந்தது.
ஈ) அறிவுக்கு இன்னொரு பக்கமும் உண்டென்பதையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.
உ) அறிவியல் என்பது அறிவு என்னும் நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே.

i) அ,இ,ஆ,உ,ஈ ii) உ,ஈ,ஆ,இ,அ iii) ஈ,ஆ,உ,இ,அ iv) உ,இ,ஆ,அ,ஈ

(40 புள்ளிகள்)



kalvi.lk

## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
### மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
### தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 11** **நேரம் : 2.00 மணித்தியாலங்கள்**

சுட்டெண்: ............................................

புள்ளிகள் : | 100

### பகுதி II

**01) சுருக்கமான விடை தருக.**

i) நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறியமாட்டாதவன்

ii) ஓய்வுபெற்ற பாடசாலையின் அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதில் இடம் பெற்றுள்ள மயக்கத்தை நீக்கி வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

iii) எழுதிய கவிதையைக் கிழித்து எறிந்தான் என்பதில் உள்ள எச்சங்களை இனங்கண்டு எழுதுக.

iv) ஒண்ணுமில்லையம்மா ஒங்களத்தான் பாக்க வந்தன் இத் தொடரை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.

v) சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி. இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய் பயனிலையைத் தருக.

vi) பேச்சு வழக்கின் இரு வடிவங்களும் எவை?

vii) கொடிய யுத்தங்கள் காடுகளை அழிக்கின்றன. இவ்வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

viii) பின்வருவனவற்றுள் சமயத்துறவிகளை விளிக்கும்போது கையாளப்படும் விளிப்புச் சொல் அன்புடைய, வணக்கத்துக்குரிய, அதிமேதகு, கௌரவ.

ix) சுருக்கம் எழுதும்போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

x) வில்லுப்பாட்டு ஒன்றின் அமைப்பு முறையினை ஒழுங்குபடுத்தி எழுதுக
சபை வணக்கம், முடிவு, கதைவளர்ச்சி, சபையோருக்கு நன்றிகூறி மங்கலம் கூறல், கதை ஆரம்பம், கடவுள் வாழ்த்து

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனச் சிறப்பிக்கப்படும் ஈழம் அழகிய மலைகளையும் பாய்ந்தோடும் நதிகளையும் இயற்கைத் துறைமுகங்களையும் பசுமையான புல்வெளிகளையும் கொண்டமைந்துள்ளது. இத்தகைய எழில் கொஞ்சும் நம் நாட்டிலே இன்று கலாசாரச்



kalvi.lk

சீரழிவுகளும் சிறுவர் துஸ்பிரயோகங்களும் இடம்பெறுகின்றன. இவற்றை நீக்கி பூமியின் இயற்கைத் தன்மையைப் பேணி அதிலிருந்து அதிக நன்மைகளைப் பெற முயற்சித்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு விளக்கக் கட்டுரை.

ஆ) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்பார்கள். இத்தகைய சிறப்புடைய மூத்தோர் எமது சொத்துக்களே ஆவர். இன்று மூத்தோரை மதித்தலும் அவர்களைப் பாதுகாத்தலும் அருகிக் கொண்டே வருகின்றது. நம்மவர்கள் சுய நலனுக்காக மூத்தவர்களை இன்று முதியோர் இல்லங்களிலும் இணைக்கின்றனர். இதனை கருத்திற்கொண்டு முதியோர் தின விழாவில் நீர் ஆற்றும் சொற்பொழிவு.

இ) ஸாகிர், ஸ்மயில் ஆகியோர் இணைபிரியாத நண்பர்கள் இவர்கள் இருவரும் கல்வி கற்று உயர்தரக் கற்கைக்காக வேறு வேறு பாடசாலைகளில் இணைகின்றனர். ஸாகிர் கணிதத்துறையில் கல்வி பயின்று ஒரு பொறியியலாளராக வெளிவந்துள்ளான். ஸ்மாயில் உயர்தரக் கற்கையை இடையில் நிறுத்தி வியாபாரநிலையம் ஒன்றை நடாத்துகின்றான். எதிர்பாராமல் நீண்ட காலத்தின் பின்னர் பேரூந்தில் இவ்விரு நண்பர்களும் சந்திக்கின்றனர். அப்போது இவர்கள் இருவருக்குமிடையே இடம்பெறும் உரையாடலை எழுதுக.

ஈ) கபில் பெற்றோரை இழந்த ஒருவன். தனது மாமாவின் அரவணைப்பில் வளர்ந்தவன் மாமா தான் கபிலுக்கு எல்லாமே. கபில் கல்வி கற்று சிறந்த மாணவனாக வளர்கின்றான். மாமனாரின் மகன் வினோஜ் கல்வியிலே பின்தங்கி இருப்பவன். கபிலே வினோஜ்சுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பான். ஆனால் வினோஜ் இதைப் பொருட்படுத்தாது கல்வியைப் பாதியிலே துறக்கின்றான். அதுமட்டுமன்றி தகாத நண்பர்களோடு சேர்ந்து 'மது'விற்கும் அடிமையாகி விடுகின்றான். இந்நிலையில் கபில் வினோஜ்சை மீண்டும் நல்வழிப்படுத்தி கல்விப்பாதையில் இணைக்கின்றான். இருவரும் கல்வியில் முன்னேறுகின்றனர். இக்கதையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

**03) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் உமது வசன நடையில் எழுதுக. சொற்களின் எண்ணிக்கையைத் தருக.**

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படியுங்கள். என்றும் படியுங்கள். பலமுறை படியுங்கள். கியூரி அம்மையாரின் வரலாற்றையும் கஸ்தூரியார் காந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படியுங்கள் இவை போன்றனவற்றை மேலும் மேலும் படித்துக்கொண்டிருங்கள். நல்லவர் நட்பு வளர்பிறை போல் வளரும் என்றார் வள்ளுவர். உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர்பிறை போல் வளர வேண்டும் என விரும்புகின்றோம். அது என் வாழ்த்துதலில் இல்லை. நீங்கள் வாழும் வாழ்க்கை முறையிலேயே இருக்கின்றது.

நட்புக்காகப் பெரியோர்கள் சொன்ன அத்தனையும் கணவன் மனைவி வாழ்க்கைக்கும் பொருந்தும் நாலடியாரில் ஒரு பாட்டு உள்ளது. அதில் தக்காரின் நட்பை ஒரு கரும்பைக் குருத்தில் இருந்து அடிவரை சாப்பிடுவது போன்றது எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது வளர வளர இனிமை மிகுந்து கொண்டே செல்லுமாம். ஆனால் தகாதவரின் நட்பு இதற்கு நேர்மாறாக இனிமை குறைந்து கொண்டே போகுமாம். காரணம் என்ன? அவர் பண்புதான். அதுபோல் நீங்கள் நல்ல பண்புள்ளவர்களாக விளங்கினால் கோல் ஊன்றும் வயோதிப காலத்திலும் அன்பும் பண்பும் வளர்ந்து கொண்டே போகும். எனவே, நல்ல பண்பைக் காப்பது உங்கள் கடமை ஆகும்.

(10 புள்ளிகள்)



kalvi.lk

**04) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

வண்ண மாலைக் கைபரப்பி
உலகை வளைத்த இருள் எல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்
துயந்தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்டே விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன் தன்
புகழ் போல் எங்கும் பரந்துள்ளதால்

கானெல்லாம் மலர்ந்த முல்லை
ககன மீதெழுந்ததென்ன
வானெல்லாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளி வெண் கும்பமென்னத்
தூநிலா மதியம் வந்து
குண திசைத் தோன்றிற்றம்மா

i) இப்பாடலில் சித்திரிக்கப்படும் காட்சி எது?
ii) இப்பாடலில் காணப்படும் அணியை இனங்கண்டு எழுதுக.
iii) இப்பாடலில் யாருடைய புகழ் கூறப்பட்டுள்ளது?
iv) 'குணதிசை' எனக் கூறப்படும் திசை எது?
v) இப்பாடலில் உள்ள எதுகைச் சொற்கள் இரண்டு தருக.

(10 புள்ளிகள்)

**05)** உமது ஊரில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் என உம்மைக் கருதிக் கொண்டு உமது கிராமத்தின் பிரதான வீதி திருத்தப்படாமல் இருப்பதையும் இவ்வீதியின் முக்கியத்துவத்தையும் இது புனரமைக்கப்படாமையால் பள்ளி மாணவர்கள் முதல் சந்தைப்படுத்தும் விவசாயிகள் வரை அனைவரும் படும் துன்பங்களையும் குறிப்பிட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இவ் வீதியைப் புனரமைத்துத்தரும்படி கேட்டு 100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

அதிகரித்துச் செல்லும் போதைப்பொருள் பற்றியும் இது பள்ளி மாணவர்களிடமும் பரவி வருவது பற்றியும் குறிப்பிட்டு இதன் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் விளக்கி மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் 100 சொற்களில் அமையுமாறு துண்டுப்பிரசுரம் எழுதுக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 11** **நேரம் : 2. 00 மணித்தியாலங்கள்**

சுட்டெண்: ..........................................

புள்ளிகள் : ___ / 100

**பகுதி - III**

* **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
* **01, 02, 03, 04 ஆகிய வினாக்களுக்கும் 05, 06, 07 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

**01) சுருக்கமான விடை தருக.**

1) “கேடில் விழுச்செல்வம் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றும் பிற.”
அ) மாடு என்பதன் கருத்து யாது?
ஆ) இக்குறட்பாவின் பொருளைத் தருக.

2) அ) நான்மணிக்கடிகை என்ற நூலின் ஆசிரியர் யார்?
ஆ) இந் நூலுக்கு அப்பெயர் வரக் காரணம் யாது?

3) “காவியம் எந்த இடத்தில் முடியும், எந்தச் சமயத்தில் முடியும் என்பதை அந்தக் காவியம் தான் தீர்மானிக்க முடியும்” இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது.

4) கலம்பகம் என்றால் என்ன?

5) “ஆழிவாய்ச்சத்தம் அடங்காதோ......” என்ற பாடலில் தலைவி இரவு நீண்டமைக்காகக் கூறும் காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

6) முதுமொழி வெண்பாவில் கூறப்படும் முதுமொழி ஒன்று தருக.

7) “வெய்யிலை அஞ்சி மரத்தடியில் ஒதுங்கும் பெருநிழல் மேல் குளிர்தேடி ஊரும் இளங்காற்று” இவ்வடியில் இடம்பெறும் அணி யாது?

8) பார்வைகள் என்ற சிறுகதையை எழுதியவர் யார்?
இக்கதையில் வரும் பிரதான பாத்திரங்கள் எவை?

9) i) தமயந்தி நளனுக்கு மாலை சூட்டிய நிகழ்ச்சி நளவெண்பாவில் எக் காண்டத்தில் இடம்பெற்றுள்ளது.
ii) தமயந்தியின் தந்தை பெயர் யாது?

10) முன்னோக்கு என்ற கவிதையின் மையக்கருத்து யாது? (20 புள்ளிகள்)



kalvi.lk

**02) பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

அ) மின்னுந்தார் வீமன்றன் மெய்மரபிற் செம்மை சேர்
கன்னியான் ஆகிற் கடிமாலை - **அன்னந்தான்**
**சொன்னவனைச் சூட்ட அருளென்றான் சூழ் விதியின்**
**மன்னவனைத் தன் மனத்தே கொண்டு**

ஆ) மங்கையர் கண் புனல் பொழிய மழைபொழியும் காலம்
மாரவேள் சிலை குனிக்க மயில் குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன் சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகை நகைக்கும் காலம்
**செங்கை முகில் அனைய கொடைச் செம்பொன் பெய் ஏகத்**
**தியாகியெனும் நந்தியருள்** சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக்காலம்
அவரொருவர் நாமொருவர் ஆன கொடுங்காலம்

இ) இச் சருகுகளை என் தலைமீது எறிந்தீர்கள் அல்லவா? ஆ! உங்களுடைய ஆண்மையை அழிக்கின்றேன்'' என்று சொல்லி, அவர் **தம் பற்களைக் கடித்துப் புருவத்தை நெரித்துக் கோபாவேசத்தோடு அவைகளை உற்று நோக்கவே யோகபலத்தால் அவர் சிரசினின்று அக்கினிச்சுவாலை எழுந்து அப்பக்ஷிகளை சாம்பராக்கிற்று**

ஈ) அறிவுடைய செல்வரை உலகம் போற்றும். அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும் - அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டும் உலகம் களிக்கும் அறிவிலாச் செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும் **அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி இம்மையிற் புகழும் மறுமையில் இன்பமும் எய்துவான்** அறிவிலாச் செல்வன் பயன்படவாழும் பண்பறியாப் பேதையானாய் இம்மையிற் பழியும், மறுமையில் துன்பமும் எய்துவான்.

(20 புள்ளிகள்)

**03)** "நட்சத்திரக் குழந்தைகள்'' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு
அ) கதைக்கரு
ஆ) பாத்திரம் கையாளப்பட்டதன் பொருத்தப்பாடு
இ) கதை உணர்த்தும் படிப்பினைகள்
என்பவற்றை விளக்குக.

**அல்லது**

பாரதியார் கவிநயம் என்ற கட்டுரையிலிருந்து
அ) காதலருடைய மனோபாவங்கள்
ஆ) பாரதி இயற்கை மீது கொண்ட ஈடுபாடு
என்பவற்றை ஆராய்க. (15 புள்ளிகள்)



kalvi.lk

**04)** "நந்திக் கலம்பகம" என்ற சிற்றிலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு
அ) நந்திவர்மனின் கொடை
ஆ) நந்திவர்மனின் வீரம்
இ) தலைவனின் பிரிவுத்துயர்
என்பவற்றை விளக்குக.

**அல்லது**

"மங்கையக்கரசியின் காதல்" என்ற சிறுகதையைத் துணைகொண்டு
அ) மங்கையர்க்கரசி கருணாகரன் மீது கொண்ட காதல்
ஆ) சிறுகதை ஆசிரியரான வ. வே. சு ஐயர் கையாண்ட உத்திகள்
என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

**05, 06, 07 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**05)** ஒரு பதிவிரதையின் சரித்திரம் என்ற கதையின், பதிவிரதையின் குணச்சிறப்பினையும் கதை உணர்த்தும் படிப்பினையும் எடுத்துக் காட்டுக.

**06)** செங்கோன்மை பற்றியும் கொடுங்கோன்மை பற்றியும் வள்ளுவர் கூறிய கருத்தைத் தெளிவாக விளக்குக.

**07)** "நல்லமரமும் நச்சு மரமும்" என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு நல்லார் கைபட்ட செல்வத்தின் இயல்பையும் பேதையர் கைபட்ட செல்வத்தின் இயல்பையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk